சார்பு நீதிமன்றம், குளித்தலை

O.S.No. 169 / 2021

பெயர்: வெள்ளையம்மாள் (வா.சா.1) 15.02.2023

குறுக்கு விசாரணை

தாவா சொத்துக்கள் பேரான் என்பவருக்கு பூர்வீக சொத்துக்களா அல்லது சுய சம்பாத்திய சொத்துக்களா என்று வழக்குரையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் அவருக்கு பூர்வீக சொத்துக்களாகும். பேரான் என்பவரின் மனைவி நாகம்மாள், ராமசாமி , ராமலிங்கம் மகன்கள், பெத்தாயி மற்றும் பொன்னம்மாள் மகள்கள் ஆவார். இந்த வழக்கின் 1ம் பிரதிவாதி பாரதி மேற்படி ராமசாமியின் மனைவி ஆவார். 2 முதல் 4 பிரதிவாதிகள் ராமசாமியின் பிள்ளைகள். நான் மேற்படி ராமலிங்கத்தின் மனைவி. மற்ற வாதிகள் எனது பிள்ளைகள். வா.சா.ஆ-1 தான செட்டில்மெண்ட் ஆவணத்திற்கு முன்பு பேரான் வாரிசுகளுக்குள் எவ்வித பாகப்பிரிவினையும் செய்யப்படவில்லை என்றால் சரிதான். பாகப்பிரிவினை செய்யப்படாத நிலையில் நாகம்மாள் வா.சா.ஆ.1 தான செட்டில்மெண்ட் ஆவணத்தை எழுதிக்கொடுத்துள்ளதளால் அது செல்லாது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த தான செட்டில்மெண்ட் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சர்வே எண். 589/1B என்பது ராமசாமியின் சுய சம்பாத்திய சொத்து என்றால் சரியல்ல. அதைப்பொறுத்து நாகம்மாள் தான செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்துள்ளது செல்லாது என்றால் சரியல்ல. தான செட்டில்மெண்ட் ஆவணத்தின் அடிப்படையில் சுவாதீனத்தை காட்டக்கூடிய ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால எனக்கு படிப்பறிவு இல்லை அதைப்பற்றி எனக்கு தெரியாது. தான செட்டில்மெண்ட் ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள சொத்துக்களைப் பொறுத்து எந்த பரிகாரமும் நான் கேட்கவில்லை. தான செட்டில்மெண்ட் ஆவணத்தின் படி எனது கணவர் அனுபவித்து வந்ததாக சொல்வது தவறு தான செட்டில்மெண்ட் சட்டப்படி செல்லாது என்றால்சரியல்ல. தானசெட்டில்மெண்ட் ஆவணம் செல்லாது அதன் மூலம் வருவாய்த்துறை ஆவணங்களை பெயர் மாற்றம் செய்ய முடியாததால் தான் எனது கணவரும் ராமலிங்கமும் 1ம் பிரிதிவாதியும் சேர்ந்து ஒரு பாகப்பிரிவினை பத்திரம் பதிவு செய்துகொண்டார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த பாகப்பிரிவினை பத்திரம் வா.சா.ஆ-2 ஆக எனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அதனடிப்படையில் தான் வாதிகளும் பிரதிவாதிகளும் இன்று வரை சுவாதீனம் இருந்து வருகிறார்கள் என்றால்சரிதான். ராமலிங்கமும் ராமசாமியும் எழுதிக்கொண்ட பதிவு செய்யப்படாத பத்திரத்தின் அடிப்படையில் இந்த வழக்கைத தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான. அந்த பதிவு செய்யப்படாத பாகப்பிரிவினை பத்திரத்தை

நான் தாக்கல் செய்யவில்லை. அந்த ஆவணத்தை தாக்கல் செய்தால் உண்மை தெரிந்துவிடும என்பதால் தான் அந்த ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் அந் ஆவணம் 1ம் பிரதிவாதி வசம் உள்ளது. தாவா சொத்துக்கள் எங்கள் சுவாதீனத்தில் உள்ளது என்பதைக் காட்டுவதற்கு அவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அதுபற்றி எனக்குதெரியாது. நான் சொல்லக்கூடிய பதிவு செய்யப்படாத பாகப்பிரிவினை பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சர்வே எண். 589/1B. 580/3B ஆகியவை 1ம் பிரதிவாதியின் கணவர் ராமசாமியின் சுயசம்பாத்திய சொத்துக்கள் என்றால் சரியல்ல. அது கூட்டுக்குடும்ப சொத்தாகும். மேற்படி 2 சர்வே நம்பரும் கூட்டுக்குடும்ப சொத்து என்று இந்த வழக்கில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. OS.22/2013 வழக்கின் வாதி பெத்தாயி எனது தாயார். அநத் வழக்கை நான் நடத்தவில்லை எனது அம்மாதான் நடத்தி வருகிறார். எனது அம்மா பூர்வீக சொத்துக்களில் பாகம் கேட்டு எங்கள் மீதும் பிரதிவாதிகள் மீதும் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். எனது வழக்குரையில் பெத்தாயி மற்றும் பொன்னம்மாள் தங்கள் திருமணத்தின் போதே முறையான சீர்வரிசை செய்ததால் அவர்களது பங்கை விட்டுக்கொடுத்தாக எனது வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் அவ்வாறு குறிப்பிடவில்லை.1ம் பிரதிவாதியிம் எனது தாயார் பெத்தாயும் சேர்ந்து எங்களுக்கு எதிராக செயல்படுவதாக சொல்லியுள்ளேன் என்றால் அவ்வாறு சொல்லவில்லை. நான் தான் எனது தாயாரை தூண்டிவிட்டு அசல் வழக்கு எண்.22/2013 தாக்கல் செய்ய வைத்து பிரதிவாதிகளுக்கு எதிராக செயல்பட்டு வருகிறேன் என்றால் சரியல்ல. நான் தாவா சொத்தில் விவசாயம் செய்த போது என்னை தடுத்து எனக்கு பங்கு கொள்ள மறுத்ததால் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். நான் நிரந்தர உறுத்துக்கட்டளை கோரி தாக்கல செய்துள்ள இந்த வழக்கில் எனது உரிமையயும் அனுபத்தையும் காட்டக்கூடிய எந்தவித ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை என்றால்சரியல்ல. நான் பிரதிவாதிகளுக்கு மன உளைச்சலை ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் இதுபோன்ற முகாந்திரம் அற்ற வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.

ஒம் /வெள்ளையம்மாள்

ஒம்/ சண்முக கனி,
சார்பு நீதிபதி,
குளித்தலை.